REGD. No. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 55630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை : கார்த்திகை 20௳ வியாழன் (5—12—57) ★ ★ வெளியூர் : கார்த்திகை 21௳ வெள்ளி (6—12—57) [இதழ் 149

இரயில்வே நிர்வாக இலட்சணம்!

புதுடில்லி, டிச. 4—

இந்த ஆண்டு முடிய 12 மாத காலத்தில் புகைவண்டிப் பெட்டிகளிலுள்ள மின்சார பல்புகளில் மொத்தம் 1,18,000 திருடு போய்விட்டனவாம்!

600 மின்சார விசிறிகளும் களவாடப்பட்டுவிட்டதாம்!

தென் இரயில்வேயிலும், கிழக்கிந்திய இரயில்வேயிலும் நஷ்டம் அதிகம் என்று கூறப்படுகிறது.

'என்கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற தமிழர் பண்புக்கேற்ற இடம் செஞ்சிலுவைச் சங்கமே!

உடற்புண்ணை மட்டுமன்றி, உள்ளத்தில் ஏற்படும் வடுவையும் ஆற்ற செஞ்சிலுவைச் சங்கம் முயலவேண்டும்

சிலுவை, ஒரு மதச்சின்னம் மட்டுமல்ல;
மனிதாபிமானத்தின் அறிகுறியாகும்

சமாதான காலத்திலும் செஞ்சிலுவைச் சங்கப் பணி தேவைப்படுவதற்குக் காரணம் என்ன?

அண்ணா தரும் அரிய விளக்கம்

சென்னை, டிச. 5—

"யுத்தகாலத்தில் கொடுமைகள் நடந்தால்கூட மன்னிக்கக் கூடியது; ஆனால், சமாதான காலத்திலும் சொத்துக்கள் சூறையாடப்படுகின்றன—மக்கள் தொல்லைக்காளாகிறார்கள்—கொடுமை தாண்டவமாடுகிறது என்றால்—சமாதான காலத்தில்கூட செஞ்சிலுவைச் சங்கம்வந்து பணியாற்றக்கூடிய நிலை ஏற்படுகிறது என்றால், அதன் பொருள் என்ன?

"சமாதான காலத்தில் கொடுமைகள் ஏன் நடக்கின்றன?—'மக்கள் நன்றாக வாழவில்லை' என்றுதான் அதற்குப் பொருள்; ஏன் நன்றாக வாழவில்லை?—'நம்மை நன்றாக வாழவைக்கவில்லை' என்று பொருள்; வாழ வைக்காதவர்கள் யார்?—யாரிடத்தில் வாழ வைக்கும் அந்தப் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறோமோ அவர்கள், வாழ வைக்கவில்லை. அதற்குக் காரணம் என்ன?—யாரிடத்திலே பாதுகாப்பு கிடைக்கும் என்ற தெளிவு ஏற்படுத்தப் படவில்லை. தெளிவு ஏற்பட முடியாததற்குக் காரணம் என்ன?—குழப்பத்தால் மட்டுமே வாழ்ந்துகொண்டிருப்பவர்கள் ஒருசிலர் இருக்கிறார்கள்.

"குரோத உணர்ச்சிகளை நீங்கச்செய்ய, சிற்சில வேளைகளில் மனிதர்களுக்கு தேவநாம போதனைகள் செய்வதுமட்டும் போதாது. அதனால், மனிதனின் உள்ளத்திலே எழும் மிருக உணர்ச்சி போகாது. ஆகவே, செஞ்சிலுவைச் சங்கம், உடலிலே ஏற்படும் தழும்பை மட்டும் ஆற்ற உதவுவதோடன்றி, உள்ளத்திலே ஏற்படும் தழும்பை—புண்ணைப் போக்க முயல வேண்டும்."

இவ்வாறு, நேற்று மாலை, சென்னை-பூங்கா நகர் மெமோரியல் மண்டபத்தில், செஞ்சிலுவைச் சங்க நிதி திரட்டும் இயக்கத்தை அண்ணா அவர்கள் துவக்கிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்கள்.

இந்த விழாவுக்கு, டாக்டர் சி. பி. இராமசாமி ஐயர் தலைமை வகித்தார். திரு. எஸ். அனந்தராமகிருஷ்ணன் அவர்கள் அனைவரையும் வரவேற்று உரை நிகழ்த்தினார்.

அண்ணா அவர்களின் துவக்க உரைக்குப்பிறகு திருமதி இராஜம்-இராமசாமி ஆண்டறிக்கை வாசித்தார்.

செஞ்சிலுவைச் சங்கப் பணிகளில் சிறப்புக்குரியமுறையில் ஈடுபட்ட சில பெண்களுக்கு நற்சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இறுதியில், செஞ்சிலுவைச் சங்க-சென்னை மாநிலக் கிளையின் செயலாளர் திரு. சி. அமிர்த கணேசன் அவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டார்கள்.

மண்டபத்தின் உள்ளும்புறமும் கட்டுக்கடங்காதமுறையில் ஏராளமான மக்கள் குழுமியிருந்தனர்.

அண்ணா அவர்கள் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

செஞ்சிலுவைச் சங்கத்தில் 'சிலுவை' இருப்பதால், அந்தச் சங்கம் ஏதோ, கிருத்துவர்களின் பொழுதுபோக்குக்குரிய சங்கம் என்ற தவறான கருத்து மாணவப் பருவத்திலே எனக்கிருந்தது; நாடு விடுதலையடைவதற்கு முன்னால், பெரும்பாலும் ஆங்கிலேயர்களும், ஆங்கில ஆட்சியுடன் தொடர்புவைத்துக் கொண்டிருந்தவர்களும்தான் இந்தச் செஞ்சிலுவைச் சங்கத்தில் ஈடுபட்டிருந்ததால், இந்தச் சங்கம் இந்த நாட்டுக்குத் தேவைப்படாத ஒன்று என்ற எண்ணமும் பலபேரிடையே நிலவியது; இந்த இரண்டு கருத்தும் தவறானவை என்று மக்களிடையே தெளிவாகப் பிரச்சாரம் செய்யப்பட்டால், இந்த நாட்டு மக்கள், இந்த செஞ்சிலுவைச் சங்கத்துக்கு நிச்சயம் ஆதரவு காட்டுவார்கள் என்பதை இங்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

"சிலுவை, கிருத்துவர்களுக்கு மட்டும் உரியதல்ல; அது, கிருத்து மார்க்கத்தோடு இணைக்கப்பட்டிருப்பது உண்மைதான். கொடுமைகளிலிருந்து மனிதர்களைக் காப்பாற்றுவதற்காக ஒரு மனிதர் தன்னைத் தானே ஈடுபடுத்திக்கொண்டு கொடுமைக்காளான நிகழ்ச்சியை நினைவுபடுத்தும் மனிதாபிமான அறிகுறிதான் சிலுவை!

"சிலுவை, உண்மைக் கிருத்துவர்களுடைய சின்னமாகும். "வாரம் ஒருமுறை மண்டியிட்டு, பரமண்டலத்திலுள்ள பிதாவை பிரார்த்திப்பதனால் மட்டும் ஒருவர் நல்ல கிருத்துவராகிவிட முடியாது. நல்ல கிருத்துவர் என்போர் நல்ல கருணையுள்ளமும், நடவடிக்கைகளிலே தூய்மையும் கொண்டவர்களாக இருக்க வேண்டும்" என்று கிருத்துவ மார்க்கம் கூறுகிறது; 'இஸ்லாம் மதம் கூறுவதும் அதுதான்' என்கிறார்கள்; 'இந்து மதமும் அதைத்தான் கூறுகிறது' என்று சொல்லப்படுகிறது. இந்தத் தத்துவங்களுக்கு அடிப்படையில் வேறு பொருள் கூறுபவர்களும் இருக்கக்கூடும். பொதுவில், கிருத்துவர்கள் நல்ல கிருத்துவர்களாகவும், இஸ்லாமியர்கள் நல்ல இஸ்லாமியர்களாகவும், இந்துக்கள் நல்ல இந்துக்களாகவும், எல்லோருமே தங்களை நல்லவர்களாக ஆக்கிக் கொள்ளவும் சிறந்த பண்புகளைக் கடைப்பிடிக்கவேண்டும்.

"இந்தச் செஞ்சிலுவைச் சங்கம், போர்க்காலத்தில் மட்டுமின்றி, சமாதான காலங்களிலும் மக்களுக்குத் தொண்டாற்றும் மாபெரும் இயக்கமாக உலகில் ஓங்கிவளர்ந்திருக்கிறது.

"இந்தச் சங்கம், சாதி-மத-இன உணர்வுகளை விட்டுக்கொடுத்து நாட்டின் எல்லைக் கோட்டையும் மறந்து, கொடுமைகள் எங்கெங்கு நடக்கின்றனவோ, அங்கெல்லாம் பணியாற்றி, கொடுமைகளிலிருந்து மனிதர்களை விடுவிக்கும் கருணையுள்ளம் கொண்டவர்களின் இயக்கம்.

"மனித சமுதாயத்தில் இன்றுள்ள பூசல், பொறாமை, போன்ற கீழான எண்ணங்கள் அகற்றப்பட வேண்டும். இதைச் செய்ய இத்தகைய செஞ்சிலுவைச் சங்கம் ஒன்றினால்தான் முடியும். இங்க நாட்டுப் பேரறிஞர்களெல்லாம் இதில் பங்குகொண்டு பணியாற்ற வேண்டுவது மகத்தான கடமையாகும்.

"செஞ்சிலுவைச் சங்கம் இன்று ஆற்றிவரும் பணியினை, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் ஆற்றியிருக்கிறார்கள்; தமிழன் அன்றே செஞ்சிலுவைச் சங்கம் கண்டான் என்பதற்குப் பல ஆதாரங்கள் இருக்கின்றன.

"'என்கடன் பணிசெய்து கிடப்பதே' என்பதை வாழ்க்கையின் வழிமுறையாகக்கொள்ள, செஞ்சிலுவைச் சங்கம் நல்ல ஊன்றுகோலாக அமையும். வள்ளுவர் கருத்தும், தாயுமானவர் கருத்தும் நடைமுறைக்கு ஆக்கப்பட வெண்டுமென்றால் அதற்கு நல்ல—ஏற்றதொரு இடம் செஞ்சிலுவைச் சங்கம். நலிந்தோரை கைதூக்கிவிட்டு வாழ்விக்கும் நல்ல காரியத்தைச்செய்ய — குரோத உணர்ச்சிகளை நீக்கிக்கொள்ள தக்கதொரு இடம் செஞ்சிலுவைச் சங்கமாகும்."

(பேச்சின் முழுவிவரம் பின்னர் வெளிவரும்)

திராவிடர் கழகக் கிளர்ச்சி பற்றி பண்டித பந்த்

நிலைமையைக் கவனித்து வருகிறார்களாம்!

புதுடில்லி, டிச. 4—

திராவிடர் கழகத்தின் கிளர்ச்சியைப் பற்றி மக்கள் எந்தவித அக்கறையும் காட்டவில்லை என்றும், கிளர்ச்சிக்காரர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும், நிலைமையைக் கூர்ந்து கவனித்துவருவதாகவும், கடந்த 26-ந் தேதி நடைபெற்ற கிளர்ச்சியை ஒட்டி மொத்தம் 2,884 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என்றும் மக்கள் சபையில், உள்நாட்டு மந்திரி பண்டித பந்த் அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறாராம்!

அடுத்த பெரிய இரும்புத் தொழிற்சாலை பீகாரில்!

'பொகாரோ' தயாரிக்கப்படுகிறதாம்

மூன்றாம் திட்ட ஏற்பாடு பற்றி மத்திய மந்திரி

இரண்டாம் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வழிவகை தேடி அலைகிற நேரத்திலேயே, மூன்றாம் திட்டம் பற்றிய சிந்தனையும் வடவர் உள்ளத்தில் 'முளை' விடுகிறது.

மூன்றாம் திட்டம் என்றால், அந்தத் திட்டமும் வடநாட்டை வளப்படுத்த மட்டுமே இருக்கும் என்பதில் எவரும் சந்தேகம் தெரிவிக்கக் கூடாது என்பதற்காகப் பெருமுயற்சி எடுத்துக் கொள்கின்றனர், டெல்லிப் பெரியவர்கள்!

ரூர்கேலா, பிலாய், துர்க்காபூர் ஆகிய மூன்று பெரிய உருக்குத் தொழிற்சாலைகள், இரண்டாம் திட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ளன.

இனி, இரண்டாம் திட்டத்தில் வேறு, இரும்பு—உருக்குத் தொழிற்சாலைக்கான இடம் கிடையாதாம்!

மத்திய மந்திரி சர்தார் சுவரண் சிங் தெளிவாக்கியிருக்கிறார், மக்கள் சபையில்.

மூன்றாவது திட்டத்தில்தான், வேறு இரும்பு—உருக்குத் தொழிற்சாலைகள் இடம் பெறுமாம்!

'பிள்ளையார் சுழி' எங்கே விழுகிறது என்றால், பீகார் மாநிலத்தில் 'பொகாரோ' என்ற இடத்தில்!

இங்குதான் மூன்றாம் திட்டத்தின்கீழ் வரும் முதல் இரும்பு - உருக்குத் தொழிற்சாலை அமைக்கப்படுமாம்!

இதையும் அமைச்சர்தான் கூறியிருக்கிறார்!

அதற்காக இப்போதே, பொகாரோ பிரதேசம் தயாரிக்கப்பட்டு வருகிறதாம்!

மந்திரிதான், மக்கள் சபையில் கூறியிருக்கிறார்.

பீகார், ஒரிசா, மத்திய பிரதேசம், மேற்குவங்கம் ஆகிய மாநிலங்களில்தான் நிலக்கரியும், இரும்புத்தாதும் ஒருங்கே கிடைக்கின்றனவாம்! எனவே, இரும்பு—உருக்குத் தொழிற்சாலைகள் இந்த மாநிலங்களில்தான் அமைக்கப்படுமாம்!—மந்திரிதான் கூறுகிறார்!

ஊதிய விநியோக சட்டம்

மேலும் விரிவாக்கத் திட்டம்

புதுடில்லி, டிச. 4—

ஊதிய விநியோக சட்டத்தை மேலும் சில ரக ஊழியர்களுக்கு அமுல் நடத்தும் சட்டம் ஒன்றை மக்கள்சபையில் தொழிலமைச்சர் நந்தா முன்மொழிந்துள்ளார்.

திங்கள்தோறும் ரூ. 200 வரை ஊதியம் பெறும் ஊழியர்களுக்கு மட்டும் ஏற்கனவே சட்டம் அமுலிலிருக்கிறது; இதை மாதம் ரூ. 400 வரை ஊதியம் பெறுபவர்களுக்கும் அமுலாக்க இப்போது சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

மின்சாரத் திட்ட ஊழியர்கள், சாலை அமைப்பு, சாலை கண்காணிப்பு, பாலங்கள் அமைப்பு ஆகிய துறைகளில் பணியாற்றும் ஊழியர்களும் இந்தச் சட்டத்தின் நன்மைகளைப் பெறுவர்கள்.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 5—12—57 வியாழன்

திட்டமிட்ட மௌனம்!

"இந்த மாநாட்டில் குழுமியிருக்கும் பஞ்சாயத்துத் தலைவர்களைப் பார்க்கும்போது தமிழ்நாட்டையே என் கண் முன்னால் பார்ப்பதுபோல் இருக்கின்றது. இம்மாதிரியானதோர் மாநாட்டில் சேர்ந்து சிந்திப்பதால் நல்ல பலன் காண முடியும்."

இத்திங்கள் முதல் தேதியும், இரண்டாந் தேதியும் சென்னையில், சென்னை மாநில பஞ்சாயத்து அமைப்பின் மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டில் தமிழகக் கிராமங்கள் முழுதுமே கலந்துகொண்டன எனக் கூறுவதே மிகவும் பொருத்தமானதாகும்.

தமிழகத்தில் ஏழாயிரம் பஞ்சாயத்துக்கள் செயல்பட்டு வருகின்றன. அவைகளின் சார்பில் எழுநூறு பிரதிநிதிகள் மேற்படி மாநாட்டில் பங்கு கொண்டனர்.

இவ்வமைப்பின் தலைவர் திருமங்கலம் தோழர் இராசாராம் அவர்களாவர். தமிழ்நாடு காங்கிரசுக் கட்சியின் தலைவராக இருந்துவருபவரும் அவர்தான் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

அம்மாநாட்டில் தமிழக அமைச்சர்களான லூர்தம்மாள் சைமன், பக்தவத்சலனார், சுப்பிரமணியம் முதலியவர்கள் கலந்துகொண்டுள்ளனர். இவர்கள் மட்டுமே அல்லாது பேரரசின் சமுதாயநலத் திட்ட அமைச்சரான டே அவர்களும் இம்மாநாட்டில் கலந்துகொண்டுள்ளார்.

இதுவுமன்றி, சென்னை நகர முன்னாள் மேயர் மாநாட்டின் தலைவராகப் பணியாற்றி இருக்கின்றார். தமிழக முதலமைச்சர் உள்ளிட்ட பலரும் இம்மாநாட்டின் வெற்றிக்கு வாழ்த்தனுப்பியுள்ளனர்.

நடைபெற்றுள்ள பஞ்சாயத்து மாநாடு குறித்து இவ்வளவும் நாம் குறிப்பிடுவது, மாநாட்டில் கலந்துகொண்டவர்களுக்கும் கிராம மக்களுக்கும் உள்ள நெருங்கிய உறவை பொதுமக்கள் தெளிவாகத் தெரிந்து கொள்வதற்கேயாகும். அதுவுமன்றி, நிகழ்ந்த மாநாட்டிற்கும் நாடாண்டுவரும் காங்கிரசுக் கட்சிக்கும் உள்ள தொடர்பைத் திட்டவட்டமாக உணர்ந்து கொள்வதற்கும் இவ்விரிவு இன்றியமையாததாகும்.

இம்மாநாட்டில் கலந்துகொண்டவர்களுக்கும் தமிழகக் கிராமங்களுக்கும் உள்ள நெருக்கமான தொடர்பை விளக்க அமைச்சர் பக்தவத்சலனார் மாநாட்டினரைப் பார்த்துக் குறிப்பிட்டுள்ள வாசகமே போதுமானதாகும். அக்கருத்துரையைத்தான் கட்டுரையின் தலைப்பில் நாம் குறிப்பிட்டிருக்கிறோம்.

அமைச்சர், தமிழ் நாட்டையே மாநாட்டில் கண்டு உவகைப்பெருக்கெடுத்திருக்கின்றார். அம்மாநாட்டில் கலந்துகொண்டுள்ளவர்களுடன் சேர்ந்து சிந்திப்பதால் கிடைக்கக்கூடியது நல்ல பலன்தான் இருக்க முடியும் என்றும் அதே அமைச்சர் வற்புறுத்திக் கூறியுள்ளார்.

பஞ்சாயத்து மாநாட்டில் தமிழ் நாட்டையே கண்டு களித்த அமைச்சர், அண்மையில் சென்னை சட்டசபையில் அமைச்சரவையால் அவசர அவசரமாக நிறைவேற்றிவைக்கப்பட்ட பஞ்சாயத்துத் திருத்தச் சட்டத்தைக் குறித்து சிறு மூச்சும் விடாமலே இருந்திருக்கிறார். அத்துறையில் அமைச்சர் சாதித்துள்ள மௌனம் ஆராயத்தக்கது.

புதிய பஞ்சாயத்துத் திருத்தச் சட்டத்தின் இன்றியமையாமையையும், அதனால் எதிர்பார்க்கப்படும் நல்விளைவுகள் ஏதாவது இருக்குமானால் அவையனைத்தையும் விளக்கிக் கூறவேண்டிய தகுந்த இடம் பஞ்சாயத்து மாநாட்டைத் தவிர வேறு எதுவாகவும் இருக்கமுடியாது. அதைச் செய்வதுதான் அமைச்சரின் நீங்காக் கடமையுமாகும்—அறிவுடைமையுமாகும்.

புதிய பஞ்சாயத்துத் திருத்தச் சட்டத்தை முச்சந்திகளில் பேசிப் பொழுதுபோக்குவதைவிட, தனித்துக் கட்சித் தலைவர்களிடம் பேசித் தங்களைத் தாங்களே பாராட்டிக் கொள்வதைவிட, நிறைவேற்றியுள்ள சட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்துகிறவர்கள், அனைவரும் கூடியுள்ள பஞ்சாயத்து மாநாட்டில் விளக்கிக் கூறுவதைத்தான் அமைச்சர்களிடம் எவரும் எதிர்பார்ப்பர். ஆனால் அமைச்சர் பக்தவத்சலனாரோ, பஞ்சாயத்து மாநாட்டில் பேசித் தீரவேண்டிய பேச்சை பேசாது விட்டுவிட்டிருக்கின்றார்.

அவர் மட்டுமல்ல, பேசவேண்டிய இடத்தில் பேசவேண்டிய பேச்சை பேசாமல் இருந்திட்டவர், அமைச்சர் சுப்பிரமணியமும், பஞ்சாயத்துத் திருத்தச் சட்டத்தைக் குறித்து பஞ்சாயத்து மாநாட்டில் வாய் திறவாது இருந்துவிட்டிருக்கிறார்.

இந்த இரண்டு அமைச்சர்களும், பஞ்சாயத்து சட்டத்தைக் குறித்து பஞ்சாயத்து மாநாட்டில் விளக்கிக்கூறாது இருந்ததைக்கூட பொதுமக்கள் மறந்துவிடலாம்; ஆனால், மாநாட்டில் கலந்துகொண்ட தலந்தாபன அமைச்சர் லூர்தம்மையார்கூட, புதிய திருத்தச் சட்டம் குறித்து வாய்திறவாது இருந்ததுதான் வியப்பிலும் வியப்பாகும்.

பஞ்சாயத்து மாநாட்டில் விளக்கித் தீரவேண்டிய புதிய பஞ்சாயத்துச் சட்டத்தை, மாநாட்டில் கலந்துகொண்ட அமைச்சர்கள் மூவரும் விளக்காமல் மௌனமாக இருந்துவிட்டது, ஏதோ எதிர்பாராது தானாக ஏற்பட்ட சம்பவம் எனக் கொள்வதற்கில்லை. மூன்று அமைச்சர்களும் முன் கூட்டியே தங்களுக்குள்ளாகப் பேசி முடிவு கட்டிக்கொண்டுதான், பஞ்சாயத்துத் திருத்தச் சட்டத்தைக் குறித்து மாநாட்டில் சிறுமூச்சும் விடாது இருந்திருக்கின்றனர் என்பது, அவர்கள் திட்டமிட்ட மௌனத்தின் மூலம் வெளிப்படையாகத் தெரிகிறது.

பஞ்சாயத்துத் திருத்தச் சட்டத்தின் சில விதிகளை அதிலும் குறிப்பாக தலைவரைத் தேர்ந்தெடுப்பதில் புதிதாக நுழைந்துள்ள மறைமுகத் தேர்தல் விதியை மாநிலப் பஞ்சாயத்து அமைப்பு தீவிரமாக எதிர்க்கிறது என்ற உண்மையை அமைச்சர்கள் மூவரும் முன்னரே தெரிந்துகொண்டிருக்கிறார்கள். எனவேதான், புதிய சட்டத்தைக் குறித்து விளக்குவதின் மூலம் மாநாட்டினரின் தீவிரமான எதிர்ப்பையும், வெறுப்பையும் ஒருசேர வரவழைத்துக் கொள்வதைவிட, சட்டத்தைக் குறித்து வாய் திறவாது இருந்துவருவதே நலம் என்ற முடிவிற்கு அமைச்சர்களும் வந்துவிட்டனர் போலும்!

இதுபற்றி மாநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானமும் அமைச்சர்களின் மௌனத்திற்கு அரும் விளக்கம் தருவதாக அமைந்திருக்கிறது.

புதிய சட்டத்தைக் குறித்து மாநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் இந்த அமைச்சர் அவைக்கும், பெரும்பான்மையினரின் முடிவை ஏற்று நடந்துகொள்ள வேண்டிய ஜனநாயக உணர்வுக்கும் அணுவளவும் தொடர்பு கிடையாது என்ற பேருண்மையைத் தெளிவு படுத்திவிட்டது என்பதைப்பொதுமக்கள் மறந்துவிடமாட்டார்கள்.

உணவு தானியங்கள் இறக்குமதியின் மதிப்பு

இந்த ஆண்டு இறக்குமதி செய்யப்படும் உணவு தானியத்தின் மதிப்பு ரூ. 80 முதல் ரூ. 90 கோடிவரை இருக்குமாம்!

அடுத்த ஆண்டில் இறக்குமதி செய்யப்படும் உணவு தானியத்தின் மதிப்பு ரூ. 75 கோடிவரை இருக்குமாம்!

சிறிய நீர்ப்பாசனத் திட்ட அபிவிருத்திக்காக மேலும் ரூ. 50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதாம்; அவசியமானால், மற்றத் துறைகளில் மிகுதியாகும் தொகையையும் சிறு நீர்ப்பாசனத்திற்குச் செலவிட முடிவு செய்துள்ளனராம்.

பக்கிங்காம் கால்வாயில் போக்குவரத்து

"சென்னை—ஆந்திர மாநிலங்களை இணைப்பதாக உள்ள பக்கிங்காம் கால்வாய் பற்றி சீக்கிரமே போக்குவரத்து 'சர்வே' ஒன்று நடைபெறும்"

என்று, மக்கள் சபையில், மந்திரி ராஜ்பகதூர் தெரிவித்திருக்கிறாராம்.

இந்தியாவில் தேசீய இயக்கத்தின் தோற்றம்!

'அடிப்படை ஒற்றுமையின் விளைவு அல்ல'

'அன்னிய சர்க்காருக்கு எதிரான உணர்ச்சியின் விளைவே'

தேசீயம் பற்றி டாக்டர் ஜான்மத்தாய்

சென்னை, டிச. 2—

"தனித்தன்மை உணர்வு, தங்களின் உரிமைகளை நிலைநாட்டிக் கொள்ள அதிகாரத்தை நம்பும் போக்கு, இவை இரண்டும்தான் தேசீய அரசுகளைப் பிரித்துக்காட்டுகிற குண நலன்களாகும்.

"மற்றொரு இராஜ்யம் அல்லது இராஜ்யங்கள் பற்றிக் கொள்ளுகிற பொதுவான விரோத உணர்வுதான், ஒரு தேசீய அரசு அமைவதில் உள்ள தீர்மான அம்சமாகும்"

என்று, டாக்டர் ஜான்மத்தாய் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்.

கேரள பல்கலைக் கழகத் துணை வேந்தரான அவர், சென்னைப் பல்கலைக் கழகத்தில், 'தேசீயமும் ஜனநாயகமும்' என்ற தலைப்பில் பேசுகையில் மேலும் குறிப்பிட்டதாவது:—

"தேசீயம் பெரிதும், பிரெஞ்சுப் புரட்சியின் விளைவாகும். அது, இந்த 20-ம் நூற்றாண்டில் ஏற்பட்ட இரண்டு உலக யுத்தங்களினால் மேலும் விரிவாக்கப்பட்டு உறுதியூட்டப்பட்டிருக்கிறது; அதனைத் தொடர்ந்து ஒருபுறம் பெரும் வல்லரசுகள் ஆயுதங்களையும், படைகளையும் பெரும் அளவில் குவித்துவருகின்றன; மறுபுறம், குறைகளை எடுத்துரைக்கவும், தகராறுகளைத் தீர்த்து வைக்கவுமாக சர்வதேச நிறுவனங்கள் தோன்றியுள்ளன; ஆனாலும், இப்போது இந்த சர்வதேச நிறுவனங்கள், ஒரு அரசியல் சக்தி என்ற வகையில் தேசீயத்தின் பிரிவினை குணத்தைத் தாங்கிப் பிடிக்க முடியாத பலவீனம் படைத்தவையாயிருக்கின்றன.

"'லீக் ஆப் நேஷன்ஸ்' என்ற சர்வதேச நிறுவனம், தனது இலட்சியத்தை ஈடேற்ற முடியாமல் தோல்வி கண்டது; இப்போதைய ஐ. நா.-வும் இனிமேல்தான் வெற்றி கண்டாக வேண்டும்.

"இன்று உலகிலேயே ஆற்றல் மிக்க அரசியல் சக்தி, தேசீயம் தான்.

"முதல் யுத்தம், ஐரோப்பிய நாடுகளில் தேசீயத்தை முடுக்கிவிட்டது என்றால், இரண்டாம் யுத்தம், ஆசிய-ஆப்பிரிக்க நாடுகளில் முடுக்கிவிட்டிருக்கிறது.

"தேசீயத்தின் வரலாற்றில், இந்த இருபதாம் நூற்றாண்டின் குறிப்பிடத்தக்க வளர்ச்சி எல்லாம், இந்த நாடுகளில் தோன்றியுள்ள ஏகாதிபத்திய எதிர்ப்புத்தான்.

"மார்க்சீயத் தத்துவத்தினை அடிப்படையாகக் கொண்ட வர்க்க உணர்வைவிட, ஒரு அரசியல் சக்தி என்ற வகையில், தேசீயம்தான் மிக்க ஆற்றல் பெற்றது என்பதை நிகழ்காலச் சம்பவங்கள் சொல்லும்.

"சுதந்தரம் அடைந்த அல்லது அடைவதற்காகப் போராடிக் கொண்டிருக்கிற ஆசிய நாடுகளில், கம்யூனிசம், நேசம் தேடும் விதத்திலிருந்து இதனைத் தெரிந்துகொள்ளலாம்.

"தேசீயம்தான், சோஷலிசத்தைவிட மக்களிடம் பிடிப்பு உடையது; தேசீயத்துடன் இணைப்புப் பெற்றால் அன்றி, சோஷலிசம் செல்வாக்குப் பெறுவது துர்லபம் என்ற உணர்வுதான் இதற்கு அடிப்படை.

"அண்மையில் போலந்து, அங்கேரி இங்கெல்லாம் நடைபெற்ற புரட்சியும், யூகோஸ்லேவியாவின் அனுபவமும், சர்வதேச அரசியலில், சோஷலிசத்தைவிட தேசீயமே அதிக செல்வாக்குப் பெற்றது என்பதைக் கூறப் போதுமானதாகும்.

இந்தியாவில்......

"இந்தியாவில் தேசீய இயக்கத்தின் தோற்றம், நாட்டின் அடிப்படை ஒற்றுமையின் விளைவு எனக் கூறமுடியாது; ஒரு அன்னிய சர்க்காருக்கு எதிராகப் பொதுவாக நிலவிய எதிர்ப்பு உணர்ச்சிதான், தேசீய இயக்கத்தின் தோற்றமாகும்."

25 இலட்சம் டன் கோதுமை; 4 இலட்சம் டன் அரிசி இறக்குமதி ஆகுமாம்!

புதுடில்லி, டிச. 3—

1958-ம் ஆண்டில், புதிய திட்டப்படி, 25 இலட்சம் டன் கோதுமையும், 3 முதல் 4 இலட்சம் டன் அரிசியும் இறக்குமதி செய்ய உத்தேசிக்கப்பட்டிருக்கிறதாம்!

புது வருடம் பிறக்கும்போது இந்தியாவில் 19,66,000 டன் கோதுமையும், 9 இலட்சம் டன் அரிசியும் மட்டுமே கையிருப்பு இருக்குமாம்!

கையிருப்பு, தேவையை விட கோதுமை 20 இலட்சம் டன்; அரிசி 4 இலட்சம் டன் குறைவாக இருக்குமாம்!

இத்தகவலை மத்திய உணவு இலாகா உதவி மந்திரி தாமஸ் மக்கள்சபையில் தெரிவித்திருக்கிறார்.

ஆசைக்கோர் அளவும் இல்லையோ?

ஒரிசாவிற்குப் பெரிய துறைமுகம் வேண்டுமாம்!

மக்கள் சபையில் தீர்மானம்

புதுடில்லி, டிச. 3—

'ஷெட்யூல்ட்' பாங்கிகளை தேசீயமயமாக்கவேண்டும் எனக் கோரும் தீர்மானம் ஒன்று, வரும் டிசம்பர் 13-ந் தேதி மக்கள் சபையில் விவாதிக்கப்படும்.

ராமேஷ்வர் தாந்தியா என்பவர் கொண்டுவரும் இந்தத் தீர்மானம், நிதி நிபுணர்களையும், மக்கள் சபை உறுப்பினர்களையும் கொண்ட குழு ஒன்றினை நிறுவவேண்டும் என்றும், தேசீயமயமாக்கும் நோக்குடன், ஷெட்யூல்ட் பாங்கிகளின் நிர்வாகத்தை குழு பரிசீலிக்கவேண்டும் என்றும் கூறுகிறது.

"இரண்டாம் திட்ட காலத்தில் ஒரிசா கடற்கரைப் பகுதியில் 'பிரதீப்' எனும் இடத்தில் ஒரு பெரிய துறைமுகத்தை நிறுவவேண்டும்"

என்று, சுபாசர் என்பார் ஒரு தீர்மானம் கொண்டுவந்திருப்பதாயும், 13-ந் தேதி விவாதிக்கப்படவேண்டியவற்றுள் இதற்கே முதலிடம் கிடைத்திருப்பதாயும் கூறப்படுகிறது.

செய்திச் சுருள்

★

முத்துநகர் கே. வி. கே. சாமி படிப்பகம்

திருப்பூர் முத்துநகர் 8-வது வட்டத்தில் தி. மு. க. உறுப்பினர்கள் கூட்டம் தோழர் எம். பி. கோவிந்தசாமி தலைமையில் நடைபெற்றபோது, கே. வி. கே. சாமி படிப்பகம் துவக்கப்பட்டு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—செயலாளர் : அழகிரி ; துணைச் செயலாளர் : முத்துசாமி; பொருளாளர் : தண்டபாணி : நிர்வாகி: சுந்தரம். மற்றும் 12 செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஏரல் கே.வி.கே. சாமி படிப்பகம்

தோழர் எஸ். பி. முத்து தலைமையில் மேற்படி படிப்பகம் அமைக்கப்பட்டு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர் : அன்பரசு ; துணைச்செயலாளர் : பிச்சை ; பொருளாளர் : வி. தொம்மை. மற்றும் செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திருத்துறைப்பூண்டி கே. வி.கே.சாமி நினைவுமன்றம்

தோழர் டி. எஸ். கல்யாணசுந்தரம் தலைமையில் கே. வி. கே. சாமி நினைவு மன்றம் ஆரம்பிக்கப்பட்டு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர் : செல்வம்-பக்கிரிசாமி ; துணைச் செயலாளர் : கி. கோவிந்தராசன் ; பொருளாளர் : துவேம்பையன் ; செயற்குழு உறுப்பினர்கள் : கோ. ஜானகிராமன், டி. எஸ். கல்யாணசுந்தரம், அ. ப. முகம்மது, என். பி. வீராசாமி. இ. பிச்சைக்கண்ணு, ஆ. சேக் அலாவுதீன், இரா. தருமலிங்கம்.

மேலூர் கலைவாணர் நினைவுப் படிப்பகம்

பெரியகடைவீதி 11-2 எண்ணுள்ள கட்டிடத்தில் மேற்படி படிப்பகம் துவக்கப்பட்டு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—செயலாளர் : சி. மு. சு.; துணைச் செயலாளர் : ச. துரைராசு ; நிதிக்காப்பாளர் : வா. அபுபக்கர் ; துணை நிதிக்காப்பாளர் : கா. மு. இபுராகிம்.

சென்னை 11-வது வட்டம் என்.எஸ்.கே. நினைவு மன்றம்

மேற்படி மன்ற நிர்வாகிகள் விவரம் :—தலைவர் : வி. அ. நாதன் ; துணைத் தலைவர் : எம். எல். தாஸ்; செயலாளர் : ப. தங்க குடியரசு ; துணைச்செயலாளர் : வ. மறையரசு ; பொருளாளர் : வி. அ. நாதன் ; செயற்குழு உறுப்பினர்கள் : கே. பி. ஆர். சாமி, கு வேலன், மு. மணவாளன், மு. இராமச்சந்திரன், ப. முல்லைச்செல்வன், மு. பாளையம்.

பண்ணுருட்டி என். எஸ். கே. படிப்பகம்

கும்பகோணம் ரோட்டில் தோழர் அந்தோணிசாமியின் கட்டிடத்தில் என். எஸ். கே. இலவசப் படிப்பக உறுப்பினர்களின் கூட்டம் தோழர் ஜெ தருமாஞ்சலு தலைமையில் நடைபெற்றபோது நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—தலைவர் : ஜெ. தருமாஞ்சலு ; துணைத் தலைவர் : டி. முனுசாமி ; செயலாளர் : ஏ. குப்புசாமி ; பொருள்காப்பாளர் : பி. குப்புசாமி ; 13 பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

சென்னை 37-வது வட்ட என். எஸ். கே. நினைவு மன்றம்

இராயப்பேட்டையை அடுத்த ஆல்தோட்டத்தில், தோழர் கோ. இளவரசு தலைமையில் தோழர் ம. கா. நம்பி மன்றத்தைத் திறந்துவைத்தார்; வே. ஈ. வரன் அவர்கள் என். எஸ். கே. உருவப் படத்தைத் திறந்துவைத்தார் ; தோழர்கள் புலர் பேசினர்.

மதுரை என். எஸ். கே. படிப்பகம் திறப்பு

தலையாரி குருநாதன் கோவில் தெரு, எண்-1 இல்லத்தில் தோழர் இரா. இராசப்பன் அவர்கள் தலைமையில், மேற்படி படிப்பகம் தோழர் கே. எஸ். சந்தானம் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது; இரவு தோழர் இரா. ஒளி ஓவியம் தலைமையில் நிர்வாகிகள் தேர்வு நடைபெற்றபோது, தோழர்கள் கி. துரைப்பாண்டியன் செயலாளராகவும், இரா. ஒளிஓவியம் துணைச் செயலாளராகவும், இரா. இராசப்பன் பொருள்காப்பாளராகவும், செயற்குழு உறுப்பினர்களாக மா. ரெங்கசாமி, செ. வள்ளிமுத்து, க. பாண்டியன், ம. முருகேசன், சு. பாலன், மு. சீ. நாகராசன், சி. காசிராசன் ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திருவெறும்பூர் என். எஸ். கே. படிப்பகம்

மேற்படி படிப்பகத்திற்கு தோழர்கள் வி. வேலாயுதம் தலைவராகவும், எம். பொன்னன் துணைத் தலைவராகவும், எம். நாட்டராயன் செயலாளராகவும், சின்னதம்பி துணைச் செயலாளராகவும், வி. குப்புசாமி பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தூத்துக்குடி மஜீத்மன்றம்

மேற்படி மன்ற உறுப்பினர்கள் கூட்டம் 20—10—57-ல் மன்றக் கட்டிடத்தில் தோழர் கே. எஸ். இராசு தலைமையில் நடைபெற்றபோது தோழர்கள் டி. எஸ். மாரியப்பன் செயலாளராகவும், பி. இஸ்மாயில் துணைச்செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

உறையூர் சங்கரன் படிப்பகம்

மேற்படி படிப்பக நிர்வாகிகள் விவரம் :—செயலாளர் ; எஸ். வரதராசன்; துணைச்செயலாளர்: எஸ். சின்னதுரை ; பொருளாளர் : மு. பிச்சைரெத்தினம் ; செயற்குழு உறுப்பினர்கள் : ச. ராமு, வேணுகோபால்: வாசுதேவன், விசுவநாதன், ராசாராம்.

சென்னை-வண்ணைமக்கள் சீர்திருத்த மன்றம்

நமச்சிவாயச்செட்டி வீதியில், எண்-8 இல்லத்தில் மேற்படி மன்றம் அமைக்கப்பட்டு, தோழர்கள் பி. கே. மூர்த்தி செயலாளராகவும், வி. துலுக்கானம் பொருளாளராகவும், மற்றும் 12 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திருவோத்தூர் வள்ளுவர் படிப்பகம்

மேற்படி படிப்பகத்தின் நிர்வாகிகள் வருமாறு : செயலாளர் : எஸ். கே. லோகநாதன் ; துணைச் செயலாளர் : வ. பு. காங்கன் ; பொருளாளர் : சி. நடேசன் ; செயற்குழு உறுப்பினர்கள் : வி. எஸ். அண்ணாசாமி, ஐ. எஸ். ரத்தினவேலு, எஸ். பி. பச்சையப்பன், டி. பி. குப்புசாமி, ஐ. என். சம்பந்தன், என். கணேசன், சி. ஏ. ஏகாம்பரம், எம். கன்னியப்பன், எம். அம்மையப்பன்.

மயிலை அறிவு வளர்ச்சி மன்றம்

27-10-57-ல், மேற்படி மன்றத்தின் புதிய நிர்வாகிகள் தேர்தல் கூட்டம் தோழர் பி. இராமசாமி தலைமையில் நடைபெற்றது:—செயலாளர்: எம். நாகப்பன்; துணைச்செயலாளர்: எம். எஸ். மணி; பொருளாளர்: கே. துரை; செயற்குழு உறுப்பினர்கள்: கே. கோவிந்தசாமி, கே. செங்குட்டுவன், எம். காளியப்பன், ஜி. கே. கிருஷ்ணன், வெ. சி. சாமி, ஆர். லோகநாதன், எம். சம்பத்.

குடியேற்றம் பகுத்தறிவு இளைஞர் மன்றம்

நகர தி. மு. கழகப் பணிமனையில், தோழர் பி. ஜி. இராசன் தலைமையில் நடைபெற்ற மன்றப் பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—செயலாளர் : ஏ.வி. துரைசாமி ; துணைச்செயலாளர் : என். கே. புண்ணியகோட்டி ; பொருளாளர்: ஏ. க. துரைசாமி; செயற்குழு உறுப்பினர்கள் : டி. கே. கோவிந்தசாமி, கே. கே. ராமமூர்த்தி. பி. கோவிந்தசாமி. கே. ஜி. முனியப்பன், சோ.சோமசுந்தரம், தமிழ்மணி, வி. என். அண்ணாமலை, ஈ. டி. வெங்கடேசன். கந்தசாமி, இரா.துரைசாமி, பி. ஜி. இராசன், எம். ஆர். குழந்தைவேல், அ. கணேசன், காளியப்பன், அ. க. திலகன், கே. என். ஜி. இராசன்.

மணப்பாறை தியாகேசர் ஆலைத் தொழிலாளர் முன்னேற்ற சங்கம்

தோழர் ஏ. எஸ். கணபதி தலைமையிலும் தோழர் எம். எஸ். மணி முன்னிலையில் நடைபெற்ற சங்க உறுப்பினர்கள் கூட்டத்தில் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—தலைவர்: திருச்சி எம். எஸ். மணி; துணைத்தலைவர்: ச. சங்கரன்; செயலாளர்: ஏ. எஸ். கணபதி; துணைச்செயலாளர்: ரெ. கோபால், எஸ். கோபாலகிருஷ்ணன்; பொருளாளர் : எஸ். அப்துல்காதர்; மேலும் ஒன்பது பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், சங்கத்தைப் பதிவுசெய்ய தீர்மானமியற்றி, அது சம்பந்தப் பட்டசட்டதிட்டங்களை உருவாக்கவும், கையொப்பமிடவும் எழுபேர் கொண்ட ஒரு தனிக் குழுவுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது.

சென்னை 24-வது வட்ட சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் மன்றம்

மேற்படி மன்றத்தின் புதிய நிர்வாகிகள் தேர்தல் தோழர் மா. தனராசு தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் நா. கிருட்டினன் செயலாளராகவும், ஏ. மதனகோபால் துணைச்செயலாளராகவும், பெ. தங்கவேலர், ப. ஜான் பொருளாளர்களாகவும், 9 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மாயூரம் உதயசூரியன் படிப்பகம்

மேற்படிப் படிப்பகத்தின் அமைப்புக் கூட்டம், சேந்தங்குடியில் தோழர் என். கிட்டப்பா தலைமையில் நடைபெற்றபோது, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—செயலாளர் : அரங்கநாக ரெத்தினம் ; துணைச்செயலாளர்: துரைராமச்சந்திரன் ; பொருளாளர் : வி. பாண்டுரங்கன் ; செயற்குழு உறுப்பினர்கள் 8 பேர்.

மதுரையில் தோழமைக் கழகம் அமைப்பு

அரசியல் ரீதியில்லாமல் மொழி வளர்ச்சிக்கும் சமுதாய வளர்ச்சிக்கும் பாடுபடும் நோக்கத்துடன் மதுரையில் தோழமைக் கழகம் என்றதொரு அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. இக்கழகத்தின் பூர்வாங்கக் கூட்டம் தோழர் பெ. பகவதி தலைமையில் நடைபெற்றது. சாதீய சங்கத்தில் உறுப்பினராக அங்கம் வகிப்பவர்களை இக்கழகத்தில் சேர அனுமதிப்பதில்லை என்ற முக்கிய நிபந்தனையுடன் இக்கழக சட்டஅமைப்பு விதிகள் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டன.

கீழ்க்கண்ட தோழர்கள் கழகத்தின் நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—தலைவர் : மா. நடராசன்; செயலாளர்கள் : எம். ஜெயபாலன், பெ. பகவதி ; பொருளாளர் : ஆ. இரத்தினம் ; செயற்குழு உறுப்பினர்கள் : பெ. துரைராசு, மு. அறமன்னன், என். சேது, மா. மாரியப்பன், நா. சிதம்பரம்.

சென்னை 45-வது வட்ட அண்ணா படிப்பகம்

தோழர் சி. அரசன் தலைமையில் மேற்படி படிப்பக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—தலைவர்: ரத்தினம்; துணைத் தலைவர்: த. செல்வராசு; செயலாளர்: ச. சிவானந்தம்; துணைச்செயலாளர்: பி. எல். பதி; பொருளாளர்கள்: ச. தனராசு, கண்ணன்; செயற்குழு உறுப்பினர்கள் 11 பேர்.

சென்னை 38-வது வட்ட அண்ணா படிப்பகம்

தோழர் எம். கே. சாமி தலைமையில், மேற்படி படிப்பகத்திற்கு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர்: ந. சுந்தரம்; துணைச்செயலாளர்: நா. முருகேசன்; பொருளாளர்: இராமகிருட்டினன்; செயற்குழு உறுப்பினர்கள்: சீராமுலு, நாமதேவு, ரத்தினம், சீனிவாசன், ஆர். பாலு, பெருமாள், சாரங்கபாணி, பொன்னையன்.

சென்னை கன்னியப்ப நகர் இளைஞர் முன்னேற்ற மன்றம்

கிராமத் தலைவர் கே. மூங்கிலார் தலைமையிலும், தோழர் கா. அப்பாதுரையார், தோழியர் அலமேலு-அப்பாதுரை ஆகியோர் முன்னிலையிலும் மேற்படி மன்றத் திறப்பு விழாவும், நிர்வாகிகள் தேர்தலும் நடைபெற்று, தோழர் கா. அப்பாதுரையார், தோழியர் அலமேலு-அப்பாதுரை, தோழர் நீலநாராயணன் ஆகியோர் சொற்பொழிவாற்றியபின் குழந்தைகளுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன. செயலாளர்: கே. ஆறுமுகம்; துணைச் செயலாளர்: க. செல்வராசன்; பொருளாளர் : தி. ரா. செயராமன்; மற்றும் 11 பேர் செயற். குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சென்னை—வண்ணை கே. எஸ். பாண்டியன் நினைவு மன்றம்

மேற்படி மன்ற உறுப்பினர் கூட்டம் தோழர் கே. எம். கண்ணபிரான் தலைமையில் நடைபெற்றபோது, தோழர் கே. சுப்பிரமணியம் புதிய செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்; 'அண்ணா சொற்பயிற்சிக் கூட்ட' அமைப்பாளராக தோழர் வை. ச. மணி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

விருதுநகர் அண்ணா மன்றம்

மேற்படி மன்ற புதிய செயற்குழுத் தேர்தல் தோழர் எஸ். பி. இராசன் தலைமையில் நடைபெற்றபோது தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் :—தலைவர்: மிக்கேல்; செயலாளர்: கா. முத்தையா; துணைச்செயலாளர்: வ. இராசா; பொருளாளர்: மா. சுப்பையா; செயற்குழு உறுப்பினர்கள்: எஸ். பி. இராசன், மா. சு. வள்ளிமுத்து, என். தங்கசாமி, எஸ். டி. சாமி, பாண்டியன், சந்தனம், எஸ். மாரியப்பன்.

த. அய்யன்கோட்டை சத்தியவாணிமுத்து படிப்பகம்

மேற்படி படிப்பக அமைப்புக் கூட்டம் தோழர் சு. பெ. ரா. தலைமையில் நடைபெற்றபோது படிப்பக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர் : எம். சின்னையா, துணைச் செயலாளர்: எஸ். பி. சங்கிலி; பொருளாளர்: பி. வெள்ளைச்சாமி; மாவட்ட பிரதிநிதி: ஏ. எஸ். ஏ. சாமி; செயற்குழு உறுப்பினர்கள்: கே. வி. கே. அய்யா, யூ. சின்னையா, கே. ஏ. இளங்கோவன், கே. ஆசைத்தம்பி, பி. வீரப்பா, எஸ். பாண்டியராசு, என்.முத்தையா, எம் வெள்ளைச்சாமி, பி. முத்துச்சாமி, பி. சோணைமுத்து, ஏ. எஸ். மதியழகன், யூ. தாசு, வி. எஸ். முருகையா, எம். கே. அழகுமலை, வி. விந்தன், யூ. சிற்றாசு, எஸ். பொன்னுச்சாமி, கே. கருப்பையா எஸ். சந்தானம்.

வடசென்னை தாளமுத்து-நடராசன் முன்னேற்ற மன்றம்

இராயபுரம், மீனாட்சியம்மன் பேட்டையிலுள்ள மேற்படி மன்றப் பணிமனையில் தோழர் ஏ. ஜே. இராபர்ட் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—செயலாளர்: எம். முனுசாமி; துணைச்செயலாளர்: இ. அன்பரசன்; பொருளாளர்: ஜி. கிருட்டினசாமி; பொறுப்பாளர்: எஸ். வைரவன்; செயற்குழு உறுப்பினர்கள்: அ. நல்லதம்பி, இங்கர்சால் எம். மதுரை, ப. முனுசாமி, டி. துரைசாமி.

தூத்துக்குடி சுப்புகுட்டி நினைவு மன்றம்

வடக்கூர் தி. மு. க. உடற்பயிற்சி நிலையத்தில் தோழர் எஸ். ஓ. வெற்றிவேல் தலைமையில் சுப்புக்குட்டி நினைவு நாடக மன்றத் துவக்கவிழா நடைபெற்றது ; தோழர்கள் ஏ. திரவியம் செயலாளராகவும், ஜே. அந்தோணிமுத்து துணைச் செயலாளராகவும், ஏ. மாடசாமி பொருளாளராகவும், எஸ். கணபதி, ஆண்டியப்பன் ஆகியோர் நாடகப் பயிற்சியாளர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தென்னிந்திய கலைத் தொழிலாளர் சங்கம்

சென்னை நவ. 27—

இச்சங்க நிர்வாகிகள் விவரம் வருமாறு:—தலைவர்: டி. எச். கிருஷ்ணன்; துணைத்தலைவர்: கே. சண்முக ஆசாரி; செயலாளர்கள்: வி. எச். செல்லப்பா, பி. பத்மநாபன்; பொருளாளர்: என். பி. சிவராம்; மற்றும் 21 பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

கோவை பாவு வீசும் தொழிலாளர் சங்கம்

மேற்படி சங்க நிர்வாகிகள் விவரம் :—தலைவர்: ஏ. எம். குப்புசாமி; துணைத் தலைவர்கள்:—சிட்டா, வி. ராமசாமி; செயலாளர்: எம். பழனிசாமி; துணைச் செயலாளர்: எம். இராமசாமி; பொருளாளர்: ஜே. சோமசுந்தரம்; 6 பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

அ. இ. அஞ்சல் ஊழியர் சங்கம் திருச்சி வட்டாரக் கிளை

மேற்படி சங்கத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் வருமாறு :—தலைவர்: எம். கே. எம். அப்துல் சலாம் எம். பி.; துணைத் தலைவர்: வைத்தியலிங்கம், அழகர்சாமி; செயலாளர்: வி. கோவிந்தராசுலு; துணைச்செயலாளர்கள்: ஜப்பார், பாஸ்கரன், சுந்தரவேலு; பொருளாளர்: கே. துரைராஜ்; துணைப் பொருளாளர்கள் : சி. பிச்சை, பி. ராஜு; அமைப்புச் செயலாளர்கள்: ஏ. இராஜமாணிக்கம், சி. பி. இராமசாமி; பரிசோதகர்: அங்கமுத்து; செயற்குழு உறுப்பினர்கள் 15 பேர்.

ஆம்பூர் (வ. ஆ.) மரமேறும் தொழிலாளர் சங்கம்

தோழர் ஆர். துரைசாமி தலைமையில் மேற்படி சங்கம் நிறுவப்பட்டு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—தலைவர்: ஆர். எம். இராசா; துணைத் தலைவர் : வி. என். தத்தப்பன்; செயலாளர் : டி. எஸ். முனிரத்தினம்; பொருளாளர்: ஏ. சின்னசாமி; நிர்வாகக் குழு உறுப்பினர்கள் 200 பேர்.

சென்னை—திருவல்லிக்கேணி மீன்பிடிப்போர் சங்கம்

கீழ்க்கண்ட தோழர்கள் மேற்படி சங்க நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—தலைவர் எம். தேசிங்கு; துணைத் தலைவர் : எஸ். ராஜி ; செயலாளர் : சி. கோவிந்தராசு; துணைச் செயலாளர் : ஆர். பக்கிரி; பொருளாளர் : எம். ஏழுமலை; துணைப் பொருளாளர்; எம். ஜலேந்திரன்; 13 பேர் செயற் குழு உறுப்பினர்கள்.

உணவுப் பொருள் வீணுவதைத் தடுக்க!

விருந்தாளிகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தப்போகிருர்களாம்!

உணவுப் பொருள் பற்ருக்குறையை முன்னிட்டு, சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்ள டெல்லி சர்க்கார் தீர்மானித்திருக்கிறதாம்!

விருந்துகளில் அழைக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த உத்தேசித்திருக்கிறதாம் சர்க்கார்!

அதுபோன்ற விருந்துகளில், ஏராளமான அளவு உணவுப் பொருள் பாழடிக்கப்படுகிறதாம்; எனவே, இதனைத் தடுக்க, நாடுமுழுமைக்குமாக திட்டமிடப் போகிறதாம், சர்க்கார்!

மூன்ரும் வகுப்புப் பிரயாணிகளுக்கு

தூங்கும் பெட்டி வசதி

புதுடில்லி, டிச. 3—

மூன்ரும் வகுப்புப் பிரயாணிகளுக்கு தூங்குவதற்கான வசதி தரும் இருவகைப் பெட்டிகள் பரிசோதிக்கப்பட்டன என்றும், எந்தவகைப் பெட்டியை கிரந்தரமான தாக்குவது என்பது முடிவானதும் மேலும் அவை செய்யப்பட்டு, அந்த வசதி நாடுமுழுதும் கிடைக்கச் செய்ய ஏற்பாடாகும் என்றும், உதவி இரயில்வே மந்திரி ஷாநாவாஸ்கான், மக்கள் சபையில் தெரிவித்திருக்கிருர்.

கேசரிப் பருப்பு உற்பத்திக்குத் தடை

புதுடில்லி, டிச. 3—

நச்சு சத்துள்ள சேகரிப்பருப்பு, துவரைப்பருப்புடன் கலந்து விற்கப்படுவதைத் தடுக்க அரசாங்கம் முயற்சித்துவருகிறதாம்.

இதனுல் ஙீல்வாத நோய் ஏற்படுகிறதாம். அவசியமானுல், கேசரி பருப்பு பயிரிடுவதைச் சட்டத்தின் மூலம் தடுக்கவும் அரசாங்கம் எண்ணியுள்ளதாம்.

கேரள சர்க்காரின் கல்வி மசோதா

எதிர்ப்பாளரின் மகஜரை டெல்லி பரிசீலிக்கிறதாம்!

புதுடில்லி, டிச. 3—

கேரள சர்க்கார் கொண்டுவந்துள்ள கல்வி மசோதாவிற்கு எதிராகத் தங்களிடம் தரப்பட்டுள்ள மகஜரை டெல்லி சர்க்கார் பரிசீலித்துக்கொண்டிருப்பதாக கல்வி மந்திரி டாக்டர் ஸ்ரீமாலி மாகிலங்கள் சபையில் தெரிவித்திருக்கிருர்.

அக்டோபர் முதல் வாரத்தில், கேரளத்திலிருந்து தூதுக்குழு ஒன்று கல்வி மந்திரியைச் சந்தித்து, இந்த மகஜரைத் தந்ததாகவும் அவர் கூறினர்.

கோவையில் ரேயான் தொழிற்சாலை

கோவையில் ஒரு ரேயான் தொழிற்சாலை ஏற்படுத்த ஏற்பாடாகியுள்ளது என்று தெரியவருகிறது.

இந்தத் தொழிற்சாலைக்கு ரூ. 5 கோடி அளவுக்கு அன்னியநாட்டு உதவி கிடைக்குமாம்.

மேல்நாடுகளுக்குச் சென்றுவிட்டு இந்தியா திரும்பியுள்ள இந்திய வர்த்தகத் தூதுக்குழுவினரில் ஒருவரான திரு. வெங்கடசாமி நாயுடு அவர்களுக்குக் கோவைப் பிரமுகர்கள் அளித்த வரவேற்பின்போது இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

அடுத்த ஆண்டு திட்டச் செலவு

மாநிலங்களுக்கு டெல்லியின் தாக்கீது

புதுடில்லி, டிச. 4—

மாநிலங்கள், தங்களின் ஐந்தாண்டுத் திட்டப் பங்கிற்கு கடந்த 1957—58-ம் ஆண்டில் ஒதுக்கிய அளவு பணமே 1958—59-ம் ஆண்டிற்கும் ஒதுக்க வேண்டுமென டெல்லி உத்தரவிட்டிருக்கிறதாம்!

தகவலை, திட்ட உதவி மந்திரி மிஸ்ரா, மாநிலங்கள் சபையில் கூறியிருக்கிருர்.

நவம்பர் திங்களுக்குள், தங்களின் திட்டச் செலவு உத்தேசங்களை அனுப்பிவிட வேண்டுமெனக் கேட்கப்பட்டிருந்ததாம்; ஆனுல் ஒரு மாநிலம்கூட அனுப்பவில்லையாம்!

இது பற்றி மாநிலங்களுடன் விவாதிப்பதும் ஜனவரி 1958-க்குள் முடிவுறவேண்டும் என்று எண்ணியிருப்பதாகவும் உதவி மந்திரி கூறியிருக்கிருர்.

"செலவு உத்தேசங்கள் திட்டக் குழுவால் ஒப்புக்கொள்ளப்பட்ட பிறகே 1958—59-ம் ஆண்டு பட்ஜெட்டில் இடம் பெறவேண்டும்" என்று, மாநிலங்களுக்குத் தாக்கீது அனுப்பப்பட்டிருக்கிறதாம்!

தங்கள் திட்டங்களை வகுக்கும் போது மாநிலங்கள், அன்னியச் செலாவணி தேவைப்படுகிற திட்டங்களை தூங்கப்போட வேண்டும் என்றும், உணவுப் பொருள் உற்பத்திக்கான திட்டத்திற்கே முதலிடம் தரவேண்டும் என்றும், ஏற்கனவே நிறைவேறியுள்ள நீர்ப்பாசனத் திட்டங்களை முழு அளவிற்கும் பயன்படுத்தவேண்டும் என்றும் டெல்லி சர்க்கார் கூறியுள்ளதாம்!

பேட்டிதர பண்டிதர் மறுப்பு

அ. இ. தேசீய ஜனநாயக காங்கிரசிற்கு ஏமாற்றம்

வரும் டிசம்பர் 8-ந் தேதி சாந்தி கிராமம் வரும்போது, தங்களின் பிரதிநிதிகளுக்குப் பேட்டி தர வேண்டுமென அகில இந்திய தேசீயக் ஜனநாயக காங்கிரஸ் கட்சியினர் பண்டித நேருவைக் கேட்டிருந்தது தெரிந்ததே.

சந்திப்பதற்கு இல்லை என்றும், விரும்பினுல், கொடுக்கவிருக்கும் மகஜரை புதுடில்லிக்கு அனுப்பி வைக்குமாறும் பண்டிதர், தந்தி மூலம் தெரிவித்துவிட்டாராம்!

அடுத்த ஆண்டில், மேற்கு வங்கத்தில் 12 இலட்சம் டன் உணவுத் தானியப் பற்ருக்குறை ஏற்படும் என்று அம்மாநில உணவு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டிற்கு 4 ஆயிரம் டன் அரிசி தரும் டெல்லி...

மேற்கு வங்கத்திற்கு 65 ஆயிரம் டன் தருகிறதாம்!

புதுடில்லி, டிச. 4—

மேற்கு வங்க மாநிலத்திற்கு மட்டும் மாதம்தோறும் 65,000 டன் அரிசி தரப்படுகிறதாம்!

செப்டம்பர் திங்களிலிருந்து டெல்லி சர்க்கார் இவ்வாறு தந்து வருவதாக, உணவு மந்திரி ஏ. பி. ஜெயின் மக்கள் சபையில் கூறியிருக்கிருர்.

கல்கத்தாவில் நாளும், நியாய விலைக் கடைகள் அதிகரித்து வருகின்றனவாம்! சுமார் 90 ஆயிரம் பேருக்கு கார்டுகள் வழங்கப்பட்டிருக்கின்றனவாம்!

இந்தோனேஷியாவில் கொந்தளிப்பு

மேலும் ஆறு டச்சு நிறுவனங்கள் கைப்பற்றப்பட்டனவாம்

ஜகார்தா, டிச. 4—

இந்தோனேஷியாவில் தொழிலாளர்கள் மேலும் ஆறு பெரிய டச்சுக் கம்பெனிகளைக் 'கைப்பற்றி'யுள்ளனராம்.

அந்தக் கம்பெனிகளின் அலுவலகங்களில் அவர்கள், கம்யூனிஸ்டுக் கட்சியின் செங்கொடியினை ஏற்றியுள்ளனராம்; ஆனுலும் கம்பெனிகளில் வழக்கம் போல வர்த்தகம் நடைபெறுவதை அனுமதித்துள்ளனராம்.

நேற்று கைப்பற்றிய கே. பி. எம். ராயல் டச்சு கப்பல் கம்பெனியின் நிர்வாகத்தை சர்க்காரிடம் தான் தாங்கள் ஒப்படைக்க முடியும் என்றும், அந்த நிர்வாகத்தில் தங்களுக்கும் பங்கு வேண்டும் என்றும் தொழிலாளர்கள் கூறியுள்ளனராம்.

ஜகார்தா இன்று அமைதியாகவே இருக்கிறது என்றும், எந்த இடத்திலும் பலாத்காரம் தலையெடுக்கவில்லை என்றும், இராணுவமும் போலீசும் இராப் பகலாக ரோந்து வந்துகொண்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

டச்சு மக்கள் நிலை

ஹேக், டிச. 4—

இந்தோனேஷியாவில் மொத்தம் 60,000 டச்சு மக்கள் வாழ்கின்றனர். நியூகினி தகராறு காரணமாக அவர்களுக்கு நெருக்கடியான நிலை ஏற்பட்டுள்ளது; டச்சு எதிர்ப்பு உணர்ச்சி இந்தோனேஷியாவில் அதிகரித்துவிட்டது.

அவர்கள் வெளியேறுவதுபற்றி இந்தோனேஷியத் தலைநகரில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகிறது என்று தெரியவருகிறது.

இந்தி எதிர்ப்புக் கூட்டம்

7—12—57 மாலை 6 மணிக்கு சென்னை—19-வது வட்டம் அண்ணு நூல் நிலையச் சார்பில், ஒட்டேரி பாஷ்யம் ரெட்டி தெருவில், தோழர் எஸ். முருகேசன் தலைமையில் இந்தி எதிர்ப்புப் பொதுக்கூட்டம் நடைபெறும்; தோழர்கள் சி. பி. சிற்றரசு, கோ செங்குட்டுவன், ஆர். ஜார்ஜ், டி. நடராசன் ஆகியோர் பேசுவர்.

நாவலர் படிப்பக நிர்வாக உறுப்பினர்களுக்கு:

7—12—57 இரவு 8 மணிக்கு சென்னை—பழைய வண்ணை, சிரங்கம்மாள் தெரு, எண் 37-ல், நாவலர் படிப்பக நிர்வாக உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்; அதுபோது, திறப்பு விழா, வரவு-செலவுக் கணக்கு பற்றி ஆராயப்படும்.

தொழிலாளர் அணிவகுப்பு

7—12—57 மாலை 5½ மணிக்கு சென்னை—கீழ்ப்பாக்கம் (மனநோய் மருத்துவ மனைக்கு எதிரில்) வெங்கடேசபுரம் காலனிக்குத் தெற்கே உள்ள திடலில் நடைபெறும் மாபெரும் தொழிலாளர் கூட்டத்தில், பிரதமர் நேரு அவர்கள் பேசுவார்.

சொற்பயிற்சிக் கூட்டம்

சென்னை—சூளை சௌந்தர பாண்டியனுர் நினைவு படிப்பகச் சார்பில், 6—12—57 மாலை 6-30 மணியளவில், படிப்பகத்தில் ஓர் சொற்பயிற்சிக் கூட்டம் தோழர் இரா. பாலராசு தலைமையில் நடைபெறும்; தோழர்கள் பலர் பேசுவர்.

நேரில் ஆங்கிலம் கற்பிப்பதற்கெனப் பிரத்தியேகமாக சென்னையில் ஏற்பட்டிருக்கிற மாபெருங் கல்வி அரங்கம்

THE SCHOOL OF ENGLISH LEARNING

ஆங்கிலக் கல்வி நிலையம்

60, பிராட்வே — மண்ணடி — சென்னை-1.

★

தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்

ஒரே வருடத்தில்

அடிப்படையிலிருந்து இலக்கண ரீதியாக

இங்கிலீஷ் திருத்தமாக நேரில் கற்கலாம்

வசதிப்படி காலையிலோ மாலையிலோ வகுப்பிற்கு வந்து ஒரு மணி நேரம் படித்தால் போதுமானது

சென்ற வருட டிசம்பர் மாதம் ஆரம்பமாகிய இங்கிலீஷ் வகுப்புகள் இந்த வருட டிசம்பரில் முடிவடைகின்றன.

புதிய வகுப்புகள்

டிசம்பர் 10-ந் தேதி ஆரம்பமாகின்றன.

வகுப்பில் சேர விண்ணப்பம் செய்துகொள்ள

கடைசி தேதி: 9-12-57

கல்லைக்கூட ஆயுதமாகப்பயன்படுத்தத் தெரிந்தில்லாத மனிதன் சந்திரமண்டலத்தை ஆட்சி செய்கின்ற அளவிற்கு உயர்ந்திருக்கிருன். எப்படி? பலர் பலவாறு சொல்லுவர். அவையனைத்தும் இல்லை. ஆனுல், அவன் ஏற்படுத்திக்கொண்ட மொழி தான் என்று எங்கள் கலைக்கூடம் நிரூபிப்பதை நேரில் காணீர்! உலகச் சுவடியைப் புரட்டிப் பார்த்து முன்னேற—உலகினரோடு பழக—அவசியமான உலகப் பொதுமொழியாகிய ஆங்கிலத்தை இக்கலாநிலையம் போதிக்கும் முறையைக் காண வாரீர்!!

முழு விவரங்களை நேரில் வந்து தெரிந்து கொள்க.

முக்கிய அறிவிப்பு:- கல்வி நிலையம் எல்லா நேரங்களிலும் திறந்திருக்கும். 16 வயதுக்கு மேற்பட்டவர்களே இவ்வகுப்புகளில் சேரலாம். பெண்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள். ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களும் இங்கு நடைபெறும் வகுப்புகளில் சேர்ந்து திருத்தமாகக் கற்றுப் பயனடையலாம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.